2012 நவம்பர் 1]

(ஆ) தென் மாவட்டங்களில் அமைதியை நிலைநாட்டுதல்—*தொடர்ச்சி*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் ஏற்பட்ட கலவரத்தினால் மூன்று உயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதில் கேட்டு அனுப்பியிருக்கின்றேன். நேற்றே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், நேற்றே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். துறைக்கு அனுப்பியிருக்கின்றேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்வேன். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி, அவர்தான் பேசுகிறாரே, நீங்கள் என்ன சொல்லப் போகின்றீர்கள்? ஒரு கட்சிக்கு ஒருவர் தானே பேச வேண்டும். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம், தென் மாவட்டங்களில் பரவி வரக்கூடிய கலவரங்கள் அரசினுடைய கவனத்திற்கு இரண்டு நாட்களாக வந்துகொண்டே இருக்கின்றன. பதில் வரவில்லை, பதில் வரவில்லை என்று சொல்கின்றீர்கள். இந்தச் சம்பவங்கள் பல மாவட்டங்களைச் சார்ந்த மக்களைப் பாதித்துக்கொண்டு இருக்கின்றன. அது சம்பந்தமாகத்தான் நாங்கள் பேசுகிறோம். நீங்கள் பதில் வரவில்லை என்று சொன்னீர்கள் என்றால் எப்படி அந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசியதைப் பதிவு செய்துவிட்டோம். சீக்கிரம் பதில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு பண்ணுகிறோம்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையுடன் பேரவைக் கூட்டத் தொடர் முடிந்துவிடுமே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் கருத்தைப் பதிவு செய்துவிட்டேன். பதிலுக்கு விரைவுபடுத்துகிறேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்ளலாம். உட்காருங்கள். திரு. பி.வி. கதிரவன், நீங்கள் சொல்லுங்கள்.*

[2012 நவம்பர் 1

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்டோபர் மாதம் 28, 29 மற்றும் 30 ஆகிய தேதிகளில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா தமிழகத்தில் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டும் அதைப்போன்றே நடைபெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடத்தில், அரசின் கவனத்தை ஈர்க்கின்ற மாதிரி ஒரு கருத்தைச் சொல்லுங்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவர் ஜெயந்தி நடக்கின்ற காலகட்டங்களில் பரமக்குடி அருகே இரண்டு பேர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள், ஒரு ஓட்டுநர், சிவக்குமார் என்பவர் அடித்துக்கொல்லப்பட்டிருக்கின்றார். 30 ஆம் தேதி, அதே நாளில் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதையெல்லாம் பதிவு செய்துகொள்கிறோம். நடவடிக்கைக்கு அனுப்புகிறோம். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள். இப்போதுதான் திரு. எம். ஆறுமுகம் கூறினார். நீங்கள் வேறு என்ன பேசப்போகின்றீர்கள்?*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27ஆம் தேதி மருதுபாண்டியர் குருபூஜை விழாவை முன்னிட்டு காவல் துறை துணை ஆய்வாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து இப்படிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் என்ன சொல்லப்போகின்றீர்கள்? (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். துறைக்கு அனுப்பியிருக்கின்றேன். பதில் வந்ததும் எடுத்துக்கொள்ளலாம். மூன்று நாள் கூட்டத்தொடரில் எப்படி எல்லாவற்றையும் எடுக்க முடியும்? நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு வந்தீர்கள். உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு காலமாக தென் தமிழகத்திலே நீடித்து வந்த அமைதி நிலையை, சம நிலையைச்*

2012 நவம்பர் 1] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

சீர்குலைக்கக்கூடிய வகையில் அண்மைக் காலமாக நடந்து வருகின்ற கலவரங்கள் குறித்து தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) முதலமைச்சரைச் சந்திக்க அனுமதி கோரி தே.மு.தி.க உறுப்பினர்கள் நால்வர் பத்திரிகையாளர்களுடன் முதல்வர் அலுவலகம் சென்ற பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைய தினம், முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் என்னிடம் ஒரு கடிதத்தை அளித்துள்ளார்கள். அதில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:*

"தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் எல். வெங்கடேசன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ப. சம்பத்குமார், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் டி. சுரேஷ்குமார், சூலூர் சட்டமன்ற உறுப்பினர் க. தினகரன் மற்றும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் கு. நல்லதம்பி ஆகியோர் ஒரு கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அலுவலகத்தில் 30-10-2012 செவ்வாய் அன்று கொடுக்கச் சென்றதாகவும், முதலமைச்சர் அலுவலகம் அதை ஏற்க மறுத்ததாகவும் 'இந்து' நாளிதழில் 31-10-2012 அன்று வெளியிடப்பட்ட செய்தி, சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள ஐந்து உறுப்பினர்களின் செயல் அவை உரிமை மீறிய செயலாக இருப்பதை அறிந்து இந்த அவை உரிமை மீறலை உரிமை மீறல் பிரச்சினையாகச் சமர்ப்பிக்கின்றேன் என்று சொல்லி, தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர் கட்சிக் கொறடா திரு. வி.சி. சந்திரகுமார் மற்றும் மேற்படி ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையிலே அமைந்துள்ளது.